இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 01 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 25 – திங்கள்கிழமை 10 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 01 : Thiruvalluvar Year - 2057 - Aadi 25 - Monday 10 August 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


## பாரதூரமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு – சிறுபான்மையினருக்கு எதிரான

# FCRA திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறுக!

## ஒன்றிய அரசுக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஆக. 10 -**

**“பாரதூரமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு FCRA திருத்தச் சட்ட முன் வரைவை திரும்பப் பெற வேண்டும்” என்று ஒன்றிய அரசை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்கு முறை (திருத்த) மசோதா 2026, சிறுபான்மையினரின் தொண்டு நிறுவனங்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரத்தின் மூலம் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் நம்பியிருக்கும் நலத்திட்ட உதவிகள் முடக்கப்படக் கூடும் என்ற கடுமையான கவலைகள் எழுந்துள்ளன.

2026 மார்ச் 25 அன்று மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட “வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்கு முறை) திருத்த மசோதா, 2026” என்பது ஒரு வழக்கமான ஒழுங்கு முறை நடவடிக்கையையும் தாண்டிய ஆபத்தானதாகும். இது மேம்பட்ட வெளிப்படைத்தன்மையையும் தேசியப் பாதுகாப்பையும் நோக்கிய ஒரு நடவடிக்கையாக முன் வைக்கப்பட்டாலும், உண்மையில் இது ஒன்றிய அரசின் நிர்வாகத் தலையீட்டைக் கணிசமாக அதிகரிக்கிறது; இதன் மூலம், வெளிநாட்டு நிதியுதவியைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டமாக இருந்த FCRAவை, அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), அறக்கட்டளைகள், கல்வி மற்றும் மத நிறுவனங்கள் மீது அரசின் விரிவான கட்டுப்பாட்டைச் செயல்படுத்தும் ஒரு கருவியாக இந்தப் புதிய மசோதா மாற்றுகிறது.



தற்போது நடைமுறையில் இருக்கும் FCRA சட்டமே, உலகில் உள்ள எந்தவொரு ஜனநாயக நாடுகளிலும் இல்லாத வகையில், குடிமைச் சமூகத்தை மிகவும் கடுமையாகக் கட்டுப்படுத்தும் சட்டங்களில் ஒன்றாக ஏற்கனவே இருந்து வருகிறது. 2020 இல் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்கள் அதில் பல கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருந்தன.

இந்நிலையில் இச்சட்டம் குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :-

**இந்தியாவின் பல்வேறு மதப் பிரிவுகளைச் சேர்ந்த முக்கிய மதத் தலைவர்கள் இடம்பெற்ற, கழக நாடாளுமன்ற உறுப்பினர் வில்சன் அவர்கள் தலைமையிலான சிறுபான்மையினருக்கான கூட்டு நடவடிக்கைக் குழு மன்றத்தின் பிரதிநிதிகள், 6.8.2026 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சரைச் சந்தித்தனர்.**

**2026 மார்ச் மாதம் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட ‘FCRA திருத்தச் சட்ட முன்வரைவு 2026’ஐத் திரும்பப் பெறவும், FCRA சட்டத்தின் பிரிவு 15ஐ நீக்கவும் அல்லது அதற்கு மாற்றாக, இச்சட்ட முன்வரைவையும், வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு (ஒழுங்கு முறை) சட்டம், 2010ன் செயல்பாடுகள் குறித்த விரிவான ஆய்வையும் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவும் உள்துறை அமைச்சரிடம் அவர்கள் வலியுறுத்தினர்.**

**முன்மொழியப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வரைவின் பாரதூரமான விளைவுகளைக் கருத்தில் கொண்டு, அதன் விதிகளைத் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வரும் தி.மு.க., இந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறது.**

**சிறுபான்மையினரின் உரிமைகளைக் கருத்தில் கொண்டு, மன்றத்தின் கோரிக்கையை ஒன்றிய அரசு பரிசீலித்து, தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரிலேயே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

# FCRA திருத்த மசோதாவை எதிர்க்கும் தி.மு.க.வுக்கு நன்றி!

# தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கிறித்துவ சமயப் பெரியோர்கள் சந்திப்பு!





**சென்னை, ஆக.10–**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை - ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது வீட்டில், கழக மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி., தலைமையில் பல்வேறு கிறித்துவ சமயப் பெரியோர்கள் பலரும் சந்தித்து FCRA திருத்த மசோதாவை எதிர்த்து தி.மு.க. மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் தங்களது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்தனர்.**

கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்தவர்களின் விவரம் வருமாறு:

1. ஆர்ச் பிஷப் சின்னப்பா,
2. இவாஞ்சலிஸ்ட் பால் தினகரன், ஜீசஸ் கால்ஸ்,
3. இவாஞ்சலிஸ்ட் பாஸ்டர் மோகன் செல்லராஜா, அசெம்பிளி ஆஃப் காட்,
4. பாதர் பிரான்சிஸ், டெபுடி ஜெனரல் செக்ரட்டரி, தமிழ்நாடு பிஷப் கவுன்சில்,
5. ரிவர்டு சாம் பிரிட்டோ பிரான்சிஸ், டைரக்டர் டிபார்ட்மெண்ட் ஆப் யூத் - தலித் போர்டு, சி.எஸ்.ஐ. சினோட்,
6. ரிவர்டு ஜெபசிங் சாமுவேல் டைரக்டர், சி.எஸ்.ஐ. சேவா & இ.எம்.எஸ்.ஹெட் யூனிட் இந்தியா,
7. ரிவர்டு ஜெப டேனியல் டைரக்டர், டிபார்ட்மெண்ட் ஆப் கம்யூனிகேஷன்ஸ், சி.எஸ்.ஐ. சினோட்,
8. ரிவர்டு மிஸ்டர் எபனேசர் – கம்யூனிகேசன் எக்சிக்யூட்டிவ், சி.எஸ்.ஐ. சினோட்,
9. ரிவர்டு திரு.பார்த்திபன் சி.எஸ்.ஐ. சினோட்,
10. பிஷப் ஆல்வின் பிரபு, அட்மின் ஆப், பெந்தகோஸ்டல் சர்ச், இரும்புலியூர்,
11. பிஷப் டேவிட், பெந்தகோஸ்டல் சர்ச், இரும்புலியூர்,
12. ரிவர்டு துரைசாமி, டிரஷரர், இவாஞ்சலிகல் சர்ச் ஆப் இந்தியா,
13. ரிவர்டு நோவா ஜேம்ஸ், நேஷனல் மிஷனரி சொசைட்டி ஆப் இந்தியா,
14. பிஷப் எஸ்தர் கதிரொலி, செக்ரட்டரி, தமிழ்நாடு கிறிஸ்டியன், கவுன்சில்,
15. பிரேம்நாத் சாமுவேல், சென்னை டிரான்பர்மேஷன் நெட்வொர்க் - லீடர் & கல்வாரி கம்யூனிட்டி மினிஸ்ட்ரிஸ், சீனியர் பாஸ்டர் பெந்தேகோஸ்தே,
16. ஜான் ஜோசப், விக்டரிஸ் மினிஸ்ட்ரீஸ் – பவுண்டர் & டைரக்டர்

மேற்கண்டோர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தனர்.